**O.S.No. 191/2023** தேதி – 09.09.2025

வா.சா.1. – வெங்கடாசலபதி

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை –

நான் சென்னையில் மென்பொருள் நிறுவனத்தில் வேலை பார்ததுவருவதாக கூறியுள்ளேன். அதில் கம்பெனியின் விபரம் குறிப்பிடப்படவில்லை. நான் 2018 முதல் நாளது தேதி வரை நான் வேலை பார்த்து வருகிறேன். நான் தற்சமயமும் மேற்கண்ட நிறுவனத்தில் தான் வேலை பார்த்து வருகிறேன் என்றால் சரிதான். நான் சம்பள விபரத்தினை குறிக்கும் வகையில் வங்கியின் அக்கவுண்ட் ஸ்டேட்மென்ட் தாக்கல் செய்திருக்கிறேன். எனக்கு திருமணம் ஆகவில்லை. எனது தாயார் ஜெயலட்சுமி அவர்கள் பிஎஸ்என் எல் நிறுவனத்தில் வேலை செய்து ஓய்வு பெற்றுவிட்டார்கள் என்றால் சரிதான். 2017 ம் ஆண்டு ஓய்வு பெற்றார்கள். எனது தாயார் உயிருடன் இருந்த காலகட்டத்தில் பிரதிவாதி அவ்வப்போது கடன் வாங்குவது வழக்கம் என்றால் இல்லை. எனது வீட்டில் 2013 ம் ஆண்டு முதல் எனது வீட்டில் இருந்தார் என்றால் சரிதான். எனது வீட்டிற்கு அருகில் உள்ள எங்களுடைய வீட்டோடு இணைந்த இடத்தில் பிரதிவாதி தொழில் செய்ய இடத்தை கேட்டாரா என்றால் கேட்டார். என்னிடமும், என் தாயாரிடமும் கேட்டார். மேற்படி காலிமனை பிளாட்டில் பிரதிவாதி ஜெ.வி சுவீட்ஸ் ஸ்டால் என்ற பெயரில் தொழில் நடத்தி வருகிறார் என்றால் சரிதான். மேற்படி ஸ்வீட்ஸ் ஸ்டால் 2010 ம் ஆண்டிலிருந்து தொழில் செய்து வருகிறார். அந்த காலிமனை பிளாட்டில்தான் பிரதிவாதி சொந்த செலவில் தகர செட்டி அமைத்து தொழில் செய்து வருகிறார் என்றால் சரிதான். மேற்படி காலிமனை நிலத்தில் கிரையம் பெறுவதற்கு எனது பெயரில் ரூ.3 லட்சம் கொடுத்தாரா என்றால் இல்லை. நான் வருமான வரி செலுத்தி வருகிறேன். நான் பிரதிவாதிக்கு எந்த நாள், எந்த மாதம், எந்த ஆண்டு எவ்வளவு செலுத்தியுள்ளேன் என்றால் நவம்பர் மாதம் 2010 ம் ஆண்டு ரூ.24 லட்சம் கொடுத்திருந்தேன். அவ்வாறு நான் பணம் கொடுக்கும்போது யார் முன்னிலையிலும் கொடுக்கவில்லை. மேற்படி பணம் எங்கிருந்து கிடைத்தது என்றால் எங்களுடைய வருமானம், என்னுடைய சீட் பணம், என் தாயார் மறைவிற்கு பின் அவரது வங்கி கணக்கில் இருந்து பண பரிவர்த்தனை மூலம் கிடைத்த பணம் ஆகும். யாரிடம் சீட்

பணம் போட்டேன் என்றால் சிவகாசியை சேர்ந்த கோவிந்தராஜ் என்பவரிடம் சீட் போட்டேன். அவரை விசாரித்தால் விபரம் தெரியும். நான் அவரை விசாரிக்க தயாரக உள்ளேன். நான் வா.சா.ஆ.6 தாக்கல் செய்துள்ளேன். அது வருமான வரி கணக்கு 2022–2023 வருடம் ஆகும். ஆனால் நான் நீதிமன்றத்தில் 2020 முதல் 2022 உள்ள காலங்களுக்கான வருமான வரி கணக்கு தாக்கல் உள்ளது. அதை நான் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். வா.சா.ஆ.6 ல் உள்ள மொத்த வருமானம் ரூ.14, 55,770/– உள்ளது என்றால் சரிதான். நான் வருமான வரி செலுத்தி வருகிறேன். ரூ.20 ஆயிரத்திற்கு மேல் ரொக்கமாக கடனாக மின்னணு பரிமாற்ற முறையில்தான் செலுத்த வேண்டும் என்ற விபரம் எனக்கு நன்கு தெரியும். அவ்வாறு தெரிந்திருந்தும் ரூ.24 லட்சம் பிரதிவாதிக்கு செலுத்துவதாக கூறுவது பொய் என்று சொன்னால் என்றால் சரியல்ல. நவம்பர் 10, 2020 ல் நான் பிரதிவாதிக்கு பணம் கொடுத்ததாக பிராதில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் பிரதிவாதியிடம் செப்டம்பர் மாதம் 11, 2022 ம் ஆண்டு பணம் கேட்டேன். ஆனால் அன்றைய தினம் பிரதிவாதி காசோலையை எனக்கு 12.09.2022 ம் தேதியிட்டு என்னிடம் ஒப்படைத்தார். 22 மாத கால இடைவெளியில் நான் பிரதிவாதியிடம் அசலோ, வட்டியோ கேட்டேனா என்றால் வட்டி கேட்கவில்லை. ஆனால் அசலை மட்டும் கேட்டேன். நான் அவ்வாறு கோரப்பட்டதை 6 மாத காலத்திற்குள் கொடுக்க வேண்டும் என்று கூறியுள்ளேன். பிரதிவாதி என்னிடம் எந்த கடனும் வாங்கவில்லை என்றாலும், அவர் என்னிடம் எந்த காசோலையும் கொடுக்கப்படவில்லை என்றும், என் தாயாரிடம்தான் பிரதிவாதி கடன் பெற்று கடனை திருப்பி அடைத்துவிட்டார் என்று சொன்னால் அது சரியல்ல. அதனால் வழக்கில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> – இல்லை.